1973 மார்ச் 28]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முன்பு இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்பட்டபோது சிதம்பரம் நகரைச் சார்ந்த முக்கிய மாணவர்கள், எல்லாக் கட்சிகளையும் சார்ந்த பெரியவர்களைக் கூட்டி வைத்து, சமாதானக் குழு அமைக்கப்பட்டு அவர்கள் மூலமாக அமைதியை நிலைநாட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு என்று ஒரு குழுவைக்கூட அமைத்திருந்தார்கள். அதையும் மீறி இப்படிப்பட்ட விளைவுகள் சில சமயங்களில் ஏற்பட்டு விடுகின்றன. இந்தத் தடவை நடந்தது, மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறு என்றும், வெளியிலிருந்து வெளியார் அனுமதிக்கப்படாத அளவுக்கு நிலைமை இருந்தது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இப்போது அமைதியான சூழ்நிலை இருக்கிறது. 26-ம் தேதியிலிருந்து கல்லூரியின் பாட திட்டங்கள், கல்லூரி வகுப்புகள் மீண்டும் திறக்கப்பட்டு, படிப்படியாக நடைபெற்று வருகின்றன.

(ஆ) திரு. கே. எம். குரியன் அவர்களின் மரணத்தை அடுத்து மெட்ராஸ் ரப்பர் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதும், தொழிற்சங்க கோரிக்கைகளை நிர்வாகத்தினர் ஏற்க மறுப்பதும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இப்போது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டமன்ற 41-வது விதியின் கீழ் ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையைக் கொண்டுவருவார்.

THIRU K. T. K. THANGAMANI: Mr. Deputy Speaker, Sir, I call the attention of the Honourable the Minister for Labour to a matter of urgent public importance, namely, the closure of the Madras Rubber Factory since the death of Thiru K. M. Kurian and refusal of the management to accept the demands of the Union.

* **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின்சார வெட்டின் காரணமாக சென்னை இரப்பர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் 15—2—1973 முதல் 70 சதவிகித அளவு வரையிலான தொழிலாளரைப் பணிக்குறைப்பினால் வேலையிலிருந்து நிறுத்தினர். அவ்வாறு தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டது 13—3—73-க்குள் 30 சதவிகிதமாகக் கணிசமான அளவிற்குக் குறைக்கப்பட்டது 13—3—1973-ல் பணிக்குறைப்பினால் தொழிலாளரை வேலையிலிருந்து நிறுத்துவது குறித்து நிர்வாகத்தினர், தொழிலாளர்கள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால் முடிவேதும் எடுக்கப்படவில்லை. 14—3—73-ல் மொத்தம் 1,553 தொழிலாளர்களில் 1,100 தொழிலாளர்கள் வேலைக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். ஆனால்

[திரு. என். வி. நடராசன்] [1973 மார்ச் 28

வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளர் சிலர் நிர்வாகத்தால் வேலைக்கு அழைக்கப்பட்டவர்களைத் தடுத்தனர். அதன் விளைவாக வேலை ஸ்தம்பித்து விட்டது. ஆகவே, நிர்வாகம் தொழிலாளர்கள் அனைவரையும் பணிக்குறைப் பினால் வேலையிலிருந்து நிறுத்துவதாக அறிவித்தது. பின்னர் தொழிலாளர் பிரதிநிதிகள் நிர்வாகத்தினர் பிரதிநிதியைச் சந்தித்து வேலையிலிருந்து நிறுத்தப் பட்ட காலத்தில், வேலை வாய்ப்பளிப்பதில் தொழிலாளர்கள் அனைவருக்கும் அவரவர் துறைகளில் சுழல் முறையில் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். வேறு வகையில் சொல்லுவதானால், தொழிலாளர்கள் அவரவர் குறைகளில் சுழல் முறையில் வாரத்திற்குக் குறைந்தது மூன்று நாட் களுக்காவது பணிபெற விரும்பினர். நிர்வாகத்தினர் பான்பரி பிரிவு (Banburary) போன்ற பிரிவுகளில் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பளிக்க ஒப்புக்கொண்டனர். ஏன் என்றால் கிடைக்கும் மின்சக்தி 25 சதவிகிதத்தைக் கொண்டு அப்பிரிவு மட்டுமே இயங்க முடியும். இதைக் கொண்டு நிர்வாகம் எல்லோருக்கும் வாய்ப்பினை அளிக்க முன் வந்தது. ஆனால் தொழிலாளர் அதனை ஏற்கவில்லை.

15—3—73-ல் முதல் முறை மாற்றுப் பணியில் தொழிலாளர் சிலர் நிர்வாகத் தினரால் அழைக்கப்பட்டனர். ஆனால் அத் தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லை. மாறாக தொழிற்சாலை வாயிலில் மறியல் செய்தனர். அறிக்கைப் பலகையில் அறிவிப்பு ஒட்டுவதற்குக்கூட அதிகாரிகள் அனுமதிக்கப்படவில்லை என்று தொழிற்சாலை நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் காலை 9-30 மணிக்கு "சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நமது அன்பார்ந்த தலைவர் திரு. கே. எம். குரியன் அவர்கள் கோளாஞ்சேரியில் 14—3—1973 புதன்கிழமை விடியற்காலையில் காலமானார் என்பதை மிகவும் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்ளுகிறோம். அவரது ஆன்மா சாந்தியடைய நம்முடைய மரியாதை யைத் தெரிவிக்கும் வகையில் தொழிற்சாலை காலை 9-30 மணியிலிருந்து இன்று முழுவதும் மூடப்பட்டிருக்கும்" என்று நிர்வாகத்தினர் அறிவித்தனர். ஆகவே 15—3—73 அன்று தொழிற்சாலை விடுமுறை நாளாக மூடப்பட்டிருந்தது. மேலும் தொழிலாளர்கள் பிரதிநிதிகளில் சிலர் அப்போது அங்கிருந்த பணி யாளரமைப்பு உதவி அதிகாரியை அணுகி, அந்தநாள் ஊதியத்துடன் கூடிய விடுமுறைநாளா அல்லவா, எந்த அடிப்படையில் விடுமுறையாக அளிக்கப் பட்டது என்று கேட்டனர். பொருத்தமான மறுமொழி அளிப்பதற்காகப் பணியாளரமைப்பு உதவி அதிகாரி, ஏனைய அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்க அவகாசம் தேவை எனச் சொன்னார். 15—3—73-ஆம் நாள் மாலை, தொழி லாளர்கள் தொழிற்சாலையை விட்டுப் போகாததால், அவர்களை வெளியேற்ற நிர்வாகத்தினர் மாலை 6-30 மணிக்குக் காவல் துறையின் உதவியை நாடினர்.

16—3—73 முதல் இந்த முட்டுக்கட்டை நிலை தொடர்கிறது. பணிக்குறைப் பினுல் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நிறுத்தப்படுவதற்கு நிர்வாகத்தால் அறிவிப்பு ஏதும் அளிக்கப்படவில்லை என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர். ஆனல் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டும்கூட, வாரத்திற்குக் குறைந்தது மூன்று நாட்களுக்குத் தொழிலாளர்களுக்கு அவரவர் பிரிவுகளில் சுழல் முறையில் வேலை வாய்ப்பளிப்பதாக உத்தரவாதம் அளிக்கப்பட்டாலன்றித் தொழிலாளர் வேலைக் குத் திரும்பாததோடு மாற்று வேலை வாய்ப்பினையும் விரும்பவில்லை என நிர்வா கத்தினர் கூறுகின்றனர்.

25—3—73 அன்று காலை நிர்வாகத்தைச் சேர்ந்த ஒருவர் தொழிற்சாலைக்குள் போகும்பொழுது, சில தொழிலாளர்களால் தடுக்கப்பட்டதாகவும், அதை யொட்டி ஏழு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி அன்று மாலை காவல் நிலையத்தை நோக்கி ஊர்வலம் ஒன்று சென்ற தாகவும், காவல் நிலையம் தாக்கப்பட்டதாகவும் ஒழுங்கை நிலைநாட்ட குறைந்த அளவு பலத்தைக் காவல் துறையினர் பயன்படுத்தியதாகவும் தெரிகிறது.

இதற்கிடையே தொழிலாளர்-நிர்வாகத்தினர்க்கிடையே உள்ள பிரச்சினை களைத் தீர்க்க நாளை 29—3—73 அன்று பேச்சுவார்த்தை நடத்தும்படி தொழி லாளர் நலத் துறைச் செயலாளரைக் கேட்டுக்கொண்டு இருக்கின்றேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஸார், 1,500 தொழிலாளர்கள் பணியாற்றும் இந்த மெட்ருஸ் ரப்பர் தொழிற்சாலையில் மின்வெட்டு காரணமாகப் பாதகம் ஏற்படவில்லை. அங்கே ஜெனரேட்டர்ஸ் இருக்கின்றன.

இந்தக் குரியன் அவர்கள் இறந்ததையொட்டி அந்தத் தொழிற்சாலை மூடப் பட்டு, பிறகு போலீஸ் பாதுகாப்பினைக் கோரி, அதற்குப் பிறகு சங்கத்தின் தலைவர், உதவிக் காரியதரிசி இவர்களைக் கைது செய்தது மட்டுமின்றி அமைதி யாக வெளியே கூடியிருந்த தொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி ஆறு பேருக்குமேலே பலமான அடிபட்டு மருத்துவ மனையில் இன்று இருக்கின்ருர் களே, இப்படிப்பட்ட நிலைமை வருவதற்கு முன்பு அங்கே அரசு என்ன நட வடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, பல முறை நிர்வாகத்தினர் தொழிலாளர் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். ஆனல் அது வெற்றிபெற வில்லை. எனவே நாளைக்கு இறுதியாகப் பேசச் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இது போன்ற நிலேமைகளே நீக்கும் முறையில் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களே விடுதலே செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா? இன்றைக்கு அந்தப் பகுதியே ஒரு போலீஸ் கோட்டை மாதிரி இருக்கின்றதே, இந்த நிலேமை மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: நாளே நடைபெற இருக்கும் பேச்சு-வார்த்தைகளேயொட்டி எந்த விதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை அரசு பரிசீலிக்கும்.

(4) 1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணே நிதி நிலே அறிக்கையின் மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர்: 1972-73-ம் ஆண்டுக்கான இறுதித் துணே நிதி அறிக்கையின் மீது பொது விவாதம்.

திரு. என். கே. பழனிசாமி: பேரவைத் துணைத் தலேவரவர்களே, சென்ற சட்டமன்றத் தொடரில் இராஜமன்னுர் கமிட்டி அறிக்கையின் மீது விவாதம் செய்வதற்கு ஒரு நாள் ஒதுக்குவதாகச் சொல்லப்பட்டது. எனவே இந்தத் தொடரில் அதுபற்றி விவாதம் செய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலேவர்: இன்றைக்கு ஒரு மணிக்குக் 'கில்லெட்டின்'. எனவே சுருக்கமாகப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள் ளுகிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Sir, I congratulate the Government for having come forward with a request for supplementary grant for Rs. 6 crores in the matter of famine relief. I am confining to this aspect alone. Due to unforeseen circumstances, floods came to Madras City and several huts were damaged, some totally and some partially. The way in which money is distributed to the hut owners calls for serious consideration. I am afraid that there has been terrible mismanagement in the matter of distribution of flood relief.